IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
O.S.NO:78/2020

| DEPOSITION OF WITNESS:PW1 | NAME:MAYAVEL | DATE: 14.02.2023 |
|---|---|---|

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.என்னுடைய சொந்த ஊர் மேல்வயத்தனாங்குப்பம். நான் மேல்வயத்தனாங்குப்பம் சேர்நந்தவர் என்பதற்காக ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை ஊர் ஊராக சுவிட் கடை வைத்து நடத்தி வந்ததற்கு தொழில் வரி ரசீதி கொடுப்பார்கள் என்றால் கொடுப்பதில்லை. எனது தந்தை வார சந்தை நடத்தினார் என்பதற்காக ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2.எனது தந்தை கங்கையம்மன் கோவிலில் தெய்வபக்தியாக இருந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் மேல்வயத்தனாங்குப்பத்தில் 1975 லிருந்து கெங்கையபம்மன் கோவில் இல்லை. எந்த ஊரில் உள்ள கெங்கையம்மன் கோவிலில் நான் பிறப்பதற்காக வேண்டினார் என்றால் மனதிற்குள் வேண்டினார். சாட்சி மீண்டும் அனைத்து ஊர்களிலும் கடை போடுவார் அப்பொழுது அங்கு இருக்கும் கெங்கையம்மன் கோவிலில் வேண்டியானர். குறிப்பாக எந்த ஊரில் எந்த வருடத்தில் எந்த கெங்கையம்மன் கோவிலில் வேண்டினார் என்று சொல்லமுடியாது. எந்த ஊரில் கோவில் கட்டுவதாக வேண்டினார் என்று எனது தந்தையை அழைத்து விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் எனது தந்தை எனது தாயிடம் சொந்த ஊரில் கட்டுவதாக வேண்டினார் என்று எனது தாய் கூறினார்.

3.எனது தாயார் பெயர் ராஜம்மாள். எனது தந்தையும் எனது தாயாருக்கும் நான் ஒரே மகன் என்பதற்காக ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என் தந்தையின் ஆசையான கெங்கையம்மன் கோவில் கட்டுவதாக வேண்டியது பற்றி எனது தாயாரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். எனது தந்தை 2001 ல் இறந்துவிட்டார். எனது தந்தையார் முதலில் அரசு புறம்போக்கு இடத்தில் கெங்கையம்மன் கோவில் வைத்த இடத்தின் சர்வே எண் 6 எ ஆகும்.

4.எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். நான் சர்வே எண் பற்றி பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றாலும் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1976 ல் சிற்பி தேவராஜிடம் ரூ.6300 பணம் கொடுத்து சிரசு சிலை செய்ததாக எனது தாயார் கூறினார். நான் 1975 ல்ப பிறந்தேன் 1976 ல் சிரசு அமைத்தார்கள். 1976 ல் சிரசு வாங்கிய பின்பு தான் கோவில் அமைத்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் கோவில் அமைத்த பிறகு தான் சிரசு வாங்கியதாக குறிப்பிட்டுவிட்டு தற்போது முன்னுக்கு பின் முரணாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5.1976 ல் சிரசு வாங்கியபோது நான் ஒரு வயது குழந்தை என்பதால் யாரிடம் எப்படி வாங்கினார்கள் என்ற விவரம் எனது தாயாரையோ அல்லது சிரசு கொடுத்தவரையோ அழைத்து விசாரித்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சிரசு கொடுத்தவரை பற்றி தெரியாது எனது தாயாரை அழைத்தால் தான் தெரியவரும். வா.சா.ஆ.1 சிரசு செய்வதற்கான கொடுக்கப்பட்ட ரசீது பற்றி எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முன்பண தொகை கொடுத்தற்கான ரசீது மற்றும் பணம் கொடுத்ததற்கான ரசீது.

6.கோவிலில் உள்ள சிரசு மரத்தால் செய்யப்பட்ட சிலை. சிரசு என்றைக்கு வாங்கினார்கள் என்று தெரியாது. யார் முன்னிலையில் பணம் கொடுத்தார்கள் என்று எனது தாயாருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 ல் முன் பணம் ரூ.2000 கொடுத்தற்காக மட்டும் தான் குறிப்பு உள்ளது மீதி தொகையை கொடுத்தற்கான குறிப்பு இல்லை என்றால் எனது தாயாருக்கு தான் தெரியும் அதில் குறிப்பு இல்லை. மரசிலையை கொடுக்க சொன்னது எனது தாயாரும் எனது தந்தையாரும் சேர்ந்து தான். வா.சா.ஆ.1 ல் மரசிலை என்று எழுதியுள்ளதா என்றால் நான் படிக்கமாட்டேன் எனக்கு படிக்கதெரியும்.

7.மரசிலையை செய்த தேவராஜ அழைத்து நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கெங்கையம்மனை வணங்காததால் தான் நான் தேவராஜ அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள சாட்சிகள் உயிரோடு இருக்கிறார்களா என்ற விவரம் எனது தாயாருக்கு தான் தெரியவரும்

என்றால் சரிதான். நான் அதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

8.வா.சா.ஆ.2 ல் எகங்கையம்மன் கோவில் சர்வே எண்.6 எ உள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ.2 ல் கிராம நிர்வாக அலுவலர் அல்லது வருவாய் துறை அலுவலர் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ல் கெங்கையம்மன் கோவிலின் அளவு காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ல் கெங்கையம்மன் கோவில் அளவு எவ்வளவு போடப்பட்டுள்ளது என்றால் புலவரைபடத்தில் அளவு குறிப்பிடப்படவில்லை பட்டாவில் தான் அளவு குறிப்பிடப்படும்.

9.ஒருவர் பட்டா வாங்கவேண்டும் என்றால் ஆர்டிஓ மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல வட்டாட்சியரிடம் மனு கொடுத்தால் போதும். வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. யார் யார் அனுபவத்தில் இருந்தார்களோ அவர்களுக்கு எச்எஸ் பட்டா கொடுத்தார்கள். எச்எஸ் பட்டா என்றால் அசைன்மெண்ட் பட்டா. அனுபவ பட்டா அனுபவபாத்தியத்தை வைத்து எச்எஸ் பட்டா பொதுவாக கொடுப்பதில்லை என்றால் சரியல்ல. சமுதாய சீர்திருத்ததற்காக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டா தான் எச்எஸ் பட்டா என்றால் சரிதான்.

10.எனது த்நதை 14.07.1978 ல் திருவிழா நடத்தியதற்கான ஆதாரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. 13.07.1979 ல் எனது தந்தை புறம்போக்கு சர்வே எண்.6 எ/1 ல் ஒரு பகுதி நிலத்தில் கெங்கையம்மன் கோவில் கட்டி திருவிழா நடத்தினார் என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1979 –ல் 2001 எனது தந்தை உயிரோடு இருந்தவரை திருவிழா நடத்தியதற்கான ஆதாரம் ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருவழா நடத்தவேண்டும் என்றால் ஊருடன் சேர்ந்து நடத்தும் திருவிழா என்றால் சரிதான். திருவிழா நடத்தவேண்டும் என்றால் வருவாய் துறையிடம் மற்றும் மின் வாரியத்திடம் காவல் துறையிடம் அனுமதி

பெறவேண்டும் என்றால் சரிதான்.

11.எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்தில் திருவிழா நடத்தியிருந்தால் எனது தந்தை பெயரில் அனுமதி சான்றிதழ் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அனுமதி சான்றிதழ் கொடுப்பதில்லை. எனது தந்தை உயிருடன் இருக்கும் வரை திருவிழா நடத்துவதற்கான காவல் துறை வருவாய் துறை மற்றும் மின் வாரியத்திடம் அனுமதி பெற்றதற்கான எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை 07.08.2001 அன்று இறந்துவிடடார் என்பதற்கான இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12.1995 ல் எச்எஸ் பட்டா தாசில்தாரால் எனது பெயரில் கொடுக்கப்பட்டது. எந்த ஊர் தாசில்தார் எந்த துறையின் தாசில்தார் பட்டா வழக்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1995 ல் எனது தந்தை உயிருடன் இருக்கும்போது அவருக்கு ஏன் பட்டா கொடுக்காமல் எனக்கு படடா கொடுக்கபட்டது என்றால் அவரது பெயரில் சொத்து இருந்ததால் எனக்கு சொத்து எதுவும் இல்லாததால் எனது பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது. மேற்சொன்ன விவரங்கள் எனது தாவாவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எச்எஸ் பட்டா வீடு மனைக்காக கொடுக்கப்பட்ட பட்டா கோவிலுக்காக எச்எஸ் பட்டா கொடுப்பதில்லை என்றால் சரியல்ல.

12.தாவாவிவல் குறிப்பிட்டுள்ள கோவில் இன்றைய தேதி வரை அரசு புறம்போக்கு இடத்தில் தான் உள்ளது என்றாலும் அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த கோவிலை எந்த காலத்திலும் எனது தந்தை கட்டவில்லை என்றாலும் ஊரில் உள்ளவர்கள் கட்டினார்கள் என்றால் சரியல்ல. ஊரில் உள்ளவர்கள் கட்டியதால் தான் வருவாய் துறையினர் அமைதியாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. கோவிலுக்கு மின் இணைப்பு உள்ளது. அது கோவிலின் பெயரில் தான் உள்ளது.

13.தாவாவுடன் மனைவரி பட்டா தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன் அதில் பட்டா கெங்கையம்மன் கோவில் அறங்காவலர் சி.மாயவேல்

என்ற பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா Ex.X.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Ex.X.1 அசல் ஆவணமா என்றால் 2 அசல் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். இதுவும் அசல் ஆவணம் தான்.

14.Ex.X.1 பட்டா தாவா தாக்கல் செய்வதற்காக நான் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை உண்மை தன்மையை நான் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. பொது தகவல் அலுவர் பேர்ணாம்பட் துணை வட்டாட்சியர் அளித்த தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட பதில் அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி அதில் உள்ள விவரம் பற்றி தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார் அதை நான் படிக்கமுடியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். நான் சென்னை உயர்நீதி மன்றத்தில் 7 ரிட் மனு தமாக்கல் செய்துள்ளேன். மேலும் ஒன்று தாக்கல் செய்துள்ளேன். 8 ம் கோவில் குறித்த விவரம் தான்.

15.மேற்கூறிய விவரம் குறித்து எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கடைசியில் குறிப்பிட்டுள்ளது. 2 ரிட் மனு எண்கள் குறிப்பிட்டுள்ளேன் மற்றவை குறிப்பிட நேரம் இல்லை. என்னிடம் காட்டப்படும் டபிள்யூபி 14589/2021 ரிட் மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டது தான். அதனுடைய ஆன்லைன் காப்பி பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் டபிள்யூபி 14983/2020 ரிட் மனு என்னால் தாக்கல் செய்யப்பட்டது தான். அதனுடைய ஆன்லைன் காப்பி பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனு பீஸ்மீட்டிங் போடுவதற்காக போடப்பட்ட மனு அதற்குள்ளாகவே பீஸ்மீட்டிங் போடப்பட்டதால் அந்த மனுவை திரும்ப பெற்றுக்கொண்டோம். அதனால் அந்த மனுவின் விவரங்களை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் வழக்கின் மொத்த உண்மை தன்மையை குறிப்பிடவேண்டும் என்பது அவசியம் என்றால் சரியல்ல.

16.வா.சா.ஆ.12 ல் கெங்கையம்மன் திருவிழா போது ரூ.10,000 காவல்

நிலையத்திற்கு செலுத்த வேண்டும் என்று உத்தரவுபடி காவல் நிலையத்தில் ரூ.10,000 செலுத்தியதற்கான ரசீதுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் என்னிடம் உள்ளது. வா.சா.ஆ.11 மற்றும் 12 ல் மனுதாரர் தான் திருவிழா நடத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நாங்கள் தான் மனு தாக்கல் செய்தோம் நாங்கள் தான் திருவிழா நடத்தினோம். நான் சொல்வதுபோல் நான் திருவிழா நடத்துவதற்கு உத்தரவு தரவில்லை மாண்புமிகு நீதிமன்றம் உத்தரவுபடி எதிர்மனுதாரர் திருவிழா நடத்தவேண்டும் என்று உள்ளது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read
over of the deponent and acknowledged
by her/him to be correct.

Sd/.M.N.RAJANANDHIVARMASIVA
DISTRICT MUNSIF